# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி omanlbudsmocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 38/மா/2025
நாள் 09.03.2026

V. கிருபாநந்தன்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 4,
பெரு நகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை–600 005, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், கதவு எண் 20/439 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கிருபாநந்தன் என்பவரின் 30.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.12.2024 அன்று பெறப்பட்டு 38/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 005, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், கதவு எண் 20/439 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கிருபாநந்தன் என்பவர் 30.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சமூகம் சார்ந்த சில நல்ல விசயங்களையும் செய்து வருகின்றேன். சென்னை–600 81, மண்டலம்–04, வார்டு–38, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர் 2வது தெரு, கதவு எண் 74 என்ற இடத்தில் தனிநபர் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் தரைத்தளத்துடன் (G+3 ) மூன்று மாடி வணிகம் மற்றும் குடியிருப்பு வகை கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பல முறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்–4ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
>
> 2. கடந்த நான்கு மாதத்திற்கு முன்பு நாள் 04.08.2024 அன்று நான் கொடுத்த புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். பின்பு விசாரணை செய்து வருகிறோம் என்று பதில் அளித்தார்கள். எனினும் தற்போது வரை சட்டப்படியான உறுதியான நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை.
>
> 3. எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது இணையதள புகார் மனுவின் நகல் (2024–736EOL நாள் 04.08.2024) இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் என்னுடைய இந்த புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது

வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 18.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நான் பத்து ரூபாய் இயக்கத்தில் மத்திய சென்னை மாவட்ட செயலாளராக உள்ளேன். எனது பெயரை பயன்படுத்தி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு 30.12.2024 நாளிட்ட ஒரு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராகுமாறு எனக்கு 16.12.2025 நாளிட்ட அழைப்பாணை கிடைக்கப் பெற்றது.

இவ்விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட என்னால் அளிக்கப்பட்டதாக 30.12.2024 நாளிட்ட மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. மேலும் என் பெயர் மற்றும் முகவரியினை தவறாக பயன்படுத்தி மேற்கண்ட மனு அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகத்திலிருந்து 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு எவரும் ஆஜராகவில்லை மற்றும் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

6. மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–600 081, மண்டலம்–04, வார்டு–38, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர் 2வது தெரு, கதவு எண் 74ல் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியதாக தெரிவிக்கப்பட்ட 30.12.2024 நாளிட்ட புகார் மனு தன்னால் அளிக்கப்படவில்லை என்றும், தனது பெயரை தவறாக பயன்படுத்தி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு மனு அளிக்கப்பட்டுள்ளது என்பது மனுதாரரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

7. மேற்கண்ட மனு தொடர்பாக இம்முறைமன்றத்தில் 07.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன், விரிவான அறிக்கையுடனும் வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவம் 16.12.2025 நாளிட்ட அழைப்பாணையில் ஆணையிட்டும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–லிருந்து சம்பந்தப்பட்ட யாரும் ஆஜராகாதது மிகவும் கண்டித்தக்கது ஆகும்.

இந்நேர்வில், புகாரளிக்கப்பட்ட சென்னை–81, மண்டலம்–4, வார்டு–38, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர்–2வது தெரு, கதவு எண் 74 என்ற விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடம் உரிய அனுமதியுடன், சட்ட விதிமுறைகளை பின்பற்றி கட்டப்பட்டுள்ளதா என்பதை களஆய்வு செய்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உதவி ஆணையர், மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சியினை அறிவுறுத்தவும், மேலும் விசாரணைக்கு ஆஜராகாத பெருநகர

சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V.கிருபாநந்தன்,
கதவு எண் 20/439,
அயோத்தியா நகர்,
திருவல்லிக்கேணி,
சென்னை–600 005.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

(3 மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை 600 021.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/3/26
செயலாளர்.

11/3/26